சென்னை கொத்தவால்சாவடி இடமாற்றம்.

*556 வின—திரு. து. புருஷோத்தமன் திரு. என். கிட்டப்பா, திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கொத்தவால் சாவடியை வேறு இடத்துக்கு மாற்றும் யோசனை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

அண்ணு நகரிலுள்ள மத்தியதர வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்புகள்.

* 557 வின—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையிலுள்ள அண்ணுநகர், சாந்தி காலனியில் எம்.ஐ.ஜி. பிளாட் உரிமையாளர்களிடமிருந்து வீடுகளைக் கட்டுவதற்கான செலவு பெருமளவு அதிகரித்துள்ளது குறித்து நிறைய புகார்கள் வீட்டுவசதி வாரியத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள், அதிகரித்துள்ள செலவுக்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ). விளம்பரம் செய்யப்பட்ட விலையைவிட இறுதி விலை மிகவும் கூடுதலாக உள்ளது என்று சாந்தி குடியிருப்பிலுள்ள அங்கணங்களை வாங்கியவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். கட்டிட பொருள்களின் விலை ஏற்றம், நில ஆர்ஜிதத்திற்கு நீதி மன்றத்தின் ஆணைப்படி கொடுக்கப்பட்ட அதிகப்படியான நஷ்ட ஈடால் உருவாக்கப்பட்ட நிலவிலை ஏற்றம், கட்டுமான காலத்தில் உருவாகின்ற வட்டி தொகை முதலியனவே இந்த விலை ஏற்றத்திற்கு முக்கிய காரணங்கள்.

திரு. கு. ரமணி: அரசுத் துறைகளிலும் மற்றவற்றிலும் தொழில் செய்து ரிடையர் ஆனவர்கள் தாங்கள் சம்பாதித்த பணத்தைக் கொண்டு, கிராச்சுவடி போன்றவற்றைக் கொண்டு வீடு கட்ட விரும்புகிருர்கள். அந்த அடிப்படையில் ஏற்கனவே ஒப்பந்தம் செய்து தீர்மானிக்கப்பட்ட விலையை வேறு பொருள்களின் விலை உயர்ந்து விட்டது என்று கூறி ஒப்பந்தத் தொகையை எக்கச்சக்கமாக ஆக்கினுல் வீடு கட்ட முடியாமல் போகும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து அவ்வாறு உயர்த்தியிருப்பதைக் குறைக்க ஏற்பாடு செய்யப்படுமா? துரிதமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

1978 மார்ச் 14]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வீடு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிகமாவதற்குக் காரணங்கள் சொன்னேன். நிலத்தை ஆர்ஜிதம் பண்ணும்போது நாம் ஒரு விலையை நிர்ணயிக்கிறோம். நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றத்திற்குப் போய் அதிகமான விலை கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பு வாங்குகிறார்கள். வீடு கட்டிக் கொண்டு போகும்போது சில நேரங்களில் மெட்டீரியல் காஸ்ட் ஏற்படுகிறது. அது எப்படி இருந்தாலும் முறையீடுகள் வந்திருப்பதால் அதைப் பற்றிப் பரிசீலிப்பதற்கு சர்வ கட்சிக் கூட்டம் நடந்திருக்கிறது. அதில் மாண்புமிகு உறுப்பினர்கள் கட்சியைச் சார்ந்த பெரும் தலைவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றிய முடிவு விரைவில் எடுக்கப்படும்.

மன்னார்குடியில் தொழிலாளர் நல மருத்துவமனை.

*558 வினா— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மன்னார்குடியில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இல்லை.

(முற்பகல் 9-20).

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி பகுதியைச் சுற்றி திரு. ஆரூரான் சர்க்கரை ஆலையும் பாமிணி உரத் தொழிற்சாலையும் சி. டபிள். சி.யும் இப்படி பல்வேறு தொழிற்சாலைகள் இருப்பதால் அங்கே ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரூரான் சர்க்கரை ஆலை திருவாரூரைச் சுற்றி இருக்கிறது.

புதுக்கடை நகரப் பஞ்சாயத்துக் குடிநீர் வழங்கல்.

*559 வினா— திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், புதுக்கடை நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கு திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?